Regd. No. M. 4593. KUDI ARASU 8 பக்கங்கள்

# குடி அரசு

Estd 1924.

தனிப்பிரதி விலை ரூ. 0-1-6 சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 2-3-1946 மாசிமீ 19உ { மலர் 21

## திராவிட மாணவர் மாகாண மாநாடு

### நீடாமங்கலத்தில் கண்கொள்ளாக் காட்சி

### தலைவர்கள் அறிவுப்பாதை அமைத்தனர்

### இனிப் பொறுக்கமாட்டோம்: இன்றே சிறைசெல்வோம்!

மாணவ மாணவிகளின் வீர உரைகள்

22-2-46 இரவே மாகாணங்களின் பல இடங்களிலிருந்து திராவிட மாணவர்களும், இளைஞர்களும், கறுப்புச் சட்டை தொண்டர்களும் ஏராளமாக வந்து குழுமி விட்டனர்.

பெரியாரும், பிற தோழர்களும் நீடாமங்கலம் நோக்கிப் புறப்பட்டதிலிருந்து வழிநெடுக நீடாமங்கலம் வரும்வரை இடைவிடாது தோழர்கள் இயக்க வாழ்த்தொலிகளைச் செய்து வந்தனர். 23-2-46 காலை நீடாமங்கலம் இரயிலடியிலிருந்து ஆயிரத்திற்கு மேற்பட்ட கறுப்புச் சட்டை தொண்டர்களும், இயக்கத் தோழர்களும், புடைசூழ, பெரியார் ஈ. வெ.ரா., முதல் நாள் மாநாட்டுத் தலைவர் சேலம் கல்லூரி பிரின்சுபால் தோழர் ஏ. இராமசாமி, ஆசிரியர் சொக்கப்பா, ஏ. சி. பாலசுந்தரம், இரா. நெடுஞ்செழியன், ஆகியோர் தங்கும் விடுதிக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். காலை உணவு முடிந்ததும் தலைவர் பெரியார் ஈ.வெ.ரா, சேலம் கல்லூரி பிரின்சுபால் ஏ. இராமசாமி, ஆசிரியர் சொக்கப்பா, தோழர்கள் கே. கே. நீலமேகம், ஏ. சி. பாலசுந்தரம் ஆகியோர் ஊர்வலமாகக் காரில் அழைத்துச் செல்லப்பட்டனர். 'ஆயிரத்திற்கு மேற்பட்ட க. ச. தொண்டர்களும், இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட பொதுமக்களும் மாணவர்களும் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். நகர் முழுதும் இயக்கக் கருத்துகளும், வரவேற்பு வாக்கியங்களும் தீட்டப்பட்ட விளம்பர வளைவுகளாலும், கொடி, தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. வழிநெடுக பல இயக்க அன்பர்களின் இல்லங்களண்டை பெரியாருக்கும், மற்ற தலைவர்களுக்கும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

சங்குகள் ஒலித்தன. எக்காளங்கள் முழங்கின. வாழ்த்தொலிகள் வானை எட்டின. வழிநெடுக வரவேற்புத் துண்டுத் தாள் மத்தாப்புக்கள் விடப்பட்டன. நகர் மத்தியில் தோழர் ஈ.வெ.கி. சம்பத் அவர்கள் இயக்கக்கொடியை ஏற்றுவித்தார்.

ஊர்வலம் ஆற்றோரத்தில் அமைக்கப்பட்டிருந்த "தாலமுத்து நடராசன்" பந்தலை யடைவதற்கு முன்னமே பந்தலுக்குள் இரண்டாயிரம் மக்களுக்குமேல் குழுமியிருந்து, பல தோழர்கள் இயக்கப் பாடல்கள் பாடக்கேட்டு மகிழ்ந்தவண்ணம் தலைவர்களை எதிர்பார்த்திருந்தனர்.

பெரியாரும் தலைவர்களும் மக்களின் பெருத்த ஆரவாரத்துக்கிடையே பந்தலுள் நுழைந்து மேடையில் அமர்ந்தனர். தஞ்சை மாவட்டத்திலிருந்தும் பிற மாவட்டங்களிலிருந்தும் தோழர்கள் கே. கே. நீலமேகம், வி. சின்னதம்பி, பி. ஏ. பொன்னுசாமி, கீவளூர் இராசன் போளம் மகாதேவன் ஆகியோரும் பல ஆசிரியர்களும் இயக்கத் தோழர்களும், பல அதிகாரிகளும் வந்திருந்தனர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவிகள் திலகம் தோழியர் லாரன்ஸ் கொடியின் தத்துவத்தை விளக்கி மத்தியில் செந்நிறம் கொண்ட கறுப்புக்கொடியை ஏற்றுவித்தார்கள். மேற்படி பல்கலைக்கழக மாணவி தோழியர் காந்தி அரிய சொற்பொழிவாற்றி மாநாட்டைத் திறந்துவைத்தார்கள்.

தோழர் எஸ். தவமணிஇராசன் திராவிட மாணவரியக்கத்தின் வரலாற்றை திருவாரூர், கும்பகோணம் தொடக்கத்திலிருந்து விளக்கமாகக் கூறி எதிர்காலப் பொறுப்பையும் எடுத்துக் காட்டி தலைவர்களையும், மாணவப் பிரதிநிதிகளையும், தோழர்களையும் வரவேற்று, சேலம் கல்லூரித் தலைவர் தோழர் ஏ. இராமசாமி எம். ஏ., அவர்களை மாநாட்டிற்குத் தலைமை வகித்து நடத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார். தலைவரின் சீரிய இயக்கப் பற்றையும், திராவிட மாணவருலகிற்கு ஆற்றிவரும் தொண்டையும் பாராட்டிப் பெரியாரும் மற்றும் பல அறிஞர்களும் பேசி வழி மொழிந்தனர். பெருங் கைதட்டலுக்கிடையே எழுந்து தோழர் ஏ. இராமசாமி அவர்கள் தலைமை வகித்து முன்னுரையாக அரிய சொற்பொழிவாற்றினார்கள். (சொற்பொழிவு அடுத்த வாரம் வெளியிடப்படும்)

பின்னர் பெரியார் அவர்கள் மக்களின் பெருத்த ஆரவாரத்துக்கிடையே எழுந்து திராவிடமாணவரியக்கத்தின் அவசியத்தை விளக்கியும், இயக்கத்தின் எதிர்காலப் போராட்டங்களை திராவிட மாணவர்கள் முன்னணியில் இருந்து நடத்தவேண்டுமென்றும், மாணவப் பருவமே தந்நலமற்ற சேவைக்கும், துணிந்து பணியாற்றவும் ஏற்ற பருவமென்றும் கூறி சுமார் இரண்டுமணி நேரம் அரிய சொற்பொழிவாற்றி

னார்கள். இதோடு மாநாடு இடைவேளை உணவிற்குக் கலைந்து 3மணிக்கு மீண்டும் தொடங்கியது.

மாநாட்டுச்செயலாளர் தோழர் இரெ. இளம்வழுதியவர்கள் தோழர்கள் சென்னை எஸ். முத்தையா முதலியார், பூண்டி கிருஷ்ணசாமி வாண்டையார், திருப்பூர் எஸ். ஆர். சுப்பிரமணியம், சேலம் காந்தம் அம்மையார், கரந்தை பெரியசாமிப் புலவர் ஆகியோரிடமிருந்தும், மற்றும் பல பெரியோர்களிடமிருந்தும், கழகங்களிலிருந்தும் வந்த வாழ்த்துச் செய்திகளை வாசித்தார். பின்னர் தோழர் சேலம் கல்லூரி ஆசிரியர் சொக்கப்பா பி. ஏ., எல். டி., அவர்கள் மாணவர் கடமை என்பது குறித்தும் தோழர் எம். ஏ. சனார்த்தனம் எம். ஏ., திராவிட மாணவர்களின் கொள்கை, திட்டங்களை விளக்கியும், குடந்தை தோழியர் பி. சம்பந்தம் அம்மையார் மலையாள மொழிக்கும், தமிழுக்கும் உள்ள தொடர்பைப் பற்றியும், திராவிடநாட்டு கூட்டாட்சியில் மலையாளம் சேர்ந்திருக்கவேண்டுமென்றும் ஆங்கிலத்தில் பேசினார்கள். சென்னை சிந்தாதிரிப்பேட்டை பள்ளி ஆசிரியர் எ. சி. பாலசுந்தரம் அவர்கள் தற்கால திராவிடத்தைக் குறித்துப் பேசினார். பின்னர் குடந்தை அரசினர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் அரசன் கண்ணனார் தமிழின் முன்னேற்றத்தைக் குறித்துப் பேசினார்.

தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் திராவிடரின் தற்கால சமுதாயநிலையை விளக்கி திராவிடநாட்டுப் பிரிவினையின் அவசியத்தை வலியுறுத்தி அரிய வீரவுரை ஆற்றினார். தோழர் சம்பத் அவர்கள் திராவிட மாணவர்களும் இளைஞர்களும், சமுதாய இழிவை இனி ஒரு நாளும் பொறுத்துக்கொண்டிருக்க மாட்டார்களென்றும், துணிந்து போரில் இறங்கி இரத்தம் சிந்தியேனும் திராவிடரின் மானத்தைக் காப்பாற்றுவார்களென்றும் மிக்க ஆவேசமாகப் பேசினார். பின்னர் பெரியார் அவர்கள் காங்கிரசின் பித்தலாட்டத்தை விளக்கியும், முஸ்லிம், கிறிஸ்துவர், ஆதிதிராவிடர் ஆகியோரின் தற்கால அரசியல் நிலையை விளக்கியும், திராவிடர் தன்மானம் பெறவேண்டியதைக் குறித்தும் மிக விளக்கமாகப் பேசினார்கள். தலைவர் முடிவுரையோடு இரவு 9மணிக்கு முதல்நாள் நிகழ்ச்சி முடிவுற்றது.

இரண்டாவது நாள்

ஆயிரக்கணக்கானதோழர்கள் 24-2-46 காலை 8-30 மணிக்கு இரயிலடிசென்று தளபதி அண்ணாதுரை அவர்களை வரவேற்று அழைத்துவந்தார்கள். இரண்டாம்நாள் மாநாட்டிற்கு தளபதி அண்ணாதுரை அவர்கள் தலைமைவகிக்க வேண்டுமென தோழர் தவமணிஇராசன் முன்மொழிய பல தோழர்கள் வழிமொழிய மக்களின் பெருத்த கைதட்டலுக்கிடையே எழுந்து இந்தியாவிலுள்ள மாணவரியக்கங்களை விளக்கியும், திராவிட மாணவர்களின் எழுச்சியைப்பற்றியும், எதிர்காலத்தில் ஏற்கவேண்டிய பொறுப்பைக் குறித்தும், திராவிடநாட்டு விடுதலையின் அவசியத்தைக் கோரியும் சுமார் 2மணிநேரத்திற்குமேல் தமது தலைமையுரையை நிகழ்த்தினார்கள்.

நீடாமங்கலம் வர்த்தக ஊழியர்கள் சார்பில் பெரியார் அவர்களுக்கும் தளபதி அண்ணாதுரை அவர்களுக்கும் வாழ்த்துரைகள் வாசித்தளிக்கப்பட்டன, பல கழகங்களின் சார்பில் இருவருக்கும் மலர் மாலைகள் சூட்டப்பட்டன.

பின்னர் தோழர்கள் எஸ். கே. சாமி, புலவர் அரங்கசாமி, தொழிலாளர் மித்திரன் ஆசிரியர் காஞ்சி கலியாணசுந்தரம், ஈரோடு அப்பாவு, கூடலூர் வீரமணி, மு. கருணாநிதி, மூவலூர் இராமாமிர்தத்தம்மாள், ஆ. திராவிடமணி ஆகியோர் இயக்கக் கொள்கைகளையும், திட்டங்களையும் விளக்கி, உணர்ச்சிமிக்க சொற்பொழிவாற்றினர். இடைவேளை உணவிற்கு மாநாடு கலைந்தது.

பகல் 2மணிக்கு மாநாட்டு உணவு விடுதி மேல்மாடியில் மாகாண மாணவப் பிரதிநிதிகளின் கூட்டம் நிகழ்ந்தது. திராவிட மாணவர் கழகத்திற்கு செயற்குழு அமைக்கப்பட்டது. (விவரம் அடுத்த இதழில் வரும்)

மாநாட்டுப் பந்தலில் தாராசுரம் தோழர் வாசன் குழுவினரால் ஓர் இனிய தமிழிசைக் கச்சேரி நிகழ்த்தப்பட்டது.

3-30 மணிக்கு மாநாடு மீண்டும் தொடங்கிப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (தீர்மானங்கள் பின்னர் வரும்)

5மணிக்கு ஆற்றில் க. ச. படை அணிவகுப்பு நடந்ததும் நிழற்படம் எடுக்கப்பட்டது.

5-30 மணிக்கு குடந்தை தோழர் வி. சின்னத்தம்பி அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நிகழ்ந்தது. தோழர்கள் கே. கே. நீலமேகம், எ. சி. பாலசுந்தரம் ஆகியோர் பேசினதும் பெரியார் அவர்கள் சுமார் 3மணிநேரம் திராவிடர் இயக்கத்தின் கொள்கை, திட்டங்களை விளக்கியும், இயக்கத் தோழர்களின் கட்டுப்பாடு, ஒழுங்கு இவைகளின் அவசியத்தை வலியுறுத்தியும் மிகத் தெளிவாகப் பேசினார்கள். தோழர் சனார்த்தனம் அவர்கள் சிறிதுநேரம் பேசியபின் தளபதி அண்ணாதுரை அவர்கள் பெரியார் சொற்பொழிவில் குறிப்பிட்ட விஷயங்களை மேலும் விளக்கி மாணவர்களை வரும் போராட்டங்களுக்குத் தயாராகும்படி கேட்டுக்கொண்டார்.

திராவிட நடிகமணி தோழர் டி. வி. நாராயணசாமி அவர்களின் இன்னிசைக்குப் பின் தலைவர் முடிவுரைகூறினார். நீடாமங்கலம் தோழர் ஆறுமுகம் அவர்கள் மாநாட்டிற் கலந்துகொண்ட தலைவர்களுக்கும், மாணவத் தோழர்களுக்கும் மாநாட்டு உணவு விடுதிக்காக சீனிவாச பிள்ளை சத்திரத்தைக் கொடுத்துதவிய சத்திர நிர்வாகஸ்தர் நடராச பிள்ளைக்கும், தம்மோடிருந்து மாநாட்டை வெற்றிகரமாகநடத்த பல நாட்களாக இரவும் பகலும் ஓயாதுழைத்த நீடாமங்கலம் சு. ம. சங்க உறுப்பினர்களுக்கும், மாநாடு நடத்த இடம் கொடுத்துதவிய எ. ஒய். எஸ். பரிசுத்த நாடார் அவர்களுக்கும், பொருளுதவியும், உடலுழைப்பும் நல்கிய பிற தோழர்களுக்கும் நன்றி கூற இரவு 10-30 மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது.

மாநாட்டை வெற்றிகரமாக நடத்த தோழர்கள் எ. ஆறுமுகம், எஸ்.சரவணன் ஆர். இளம்வழுதி, எஸ். தவமணிஇராசன் ஆகியோர் பெருமுயற்சியும், மற்றும் பல தோழர்களின் ஒத்துழைப்பும் பாராட்டுதற்குரியன.

---

## கூடலூர் பகுத்தறிவு கழகம்

12-2-46 செவ்வாய்க்கிழமை மாலை 4-30 மணிக்கு கூடலூர் பகுத்தறிவு கழகத்திலிருந்து கறுப்பு சட்டை தொண்டர் படை ஊர்வலம் பல முக்கிய தெருக்களின் வழியாக வந்து செட்டி கோயிலுக்கெதிரில் தோழர் இசக்கரியா அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எ. பி. சனார்த்தனம் எம். எ, காஞ்சி கலியாணசுந்தரம், வீரமணி ஆகியோர் அரிய சொற்பொழிவாற்றினர்.

காங்கரஸ் காலிகள் கூட்டத்தில் கற்களும், முட்டைகளும் வீச, பொதுமக்கள் சீற்றம் கொள்ளவே காலிகள் ஓட்டம் பிடித்தனர். கூட்டம் 10-மணிவரை அமைதியாக நடைபெற்றது.

தோழர் சிங்காரவேலு அவர்களின் மறைவுக்காக அனுதாபம் தெரிவித்து, மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேறின. தோழர் ஆ. திராவிடமணி நன்றி கூறலுடன் கூட்டம் இனிது கலைந்தது.

---

## மணமகள் தேவை

மணமகன் R. I. M. P. மெடிகல் Practitioner மாத வருமானம் சுமார் 150 ரூபாய்க்கு குறையாமல் வருமானம் மணமகள் நாயுடு வகுப்பில் இருக்க வேண்டும், விதவையாயிருந்தாலும் சரி, வயது சுமார் 20, இருக்கலாம், (ரிஜிஸ்தர் கலியாணம்செய்து கொள்ளவும்). கீழ்க்கண்ட விலாசத்திற்கு தகவல்கள் தெரிவிக்கலாம்.

S. M. Power L. M. P.
Pent land Hospital Road,
Vellore N. A.

ரோஜா முத்தையா

# இருட்டறையில் உள்ளதடா திராவிடம்!

★

23, 24-2-46 சனி, ஞாயிறுகளில் நீடாமங்கலத்தில் நடந்த திராவிட மாணவர் முதல் மாகாண மாநாட்டில் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் புலவர் வகுப்பில் பயின்றுவரும் தோழியர் லாரன்ஸ் கொடியேற்றியகாலை நிகழ்த்திய சொற்பொழிவு:

திராவிடத்தின் தனிப்பெருந்தலைவர் பெரியார் அவர்களே! மாணவத் தோழர்களே! தமிழ்ப் பெருங்குடி மக்களே! உங்கள் யாவருக்கும் எனது வணக்கம் உரித்தாகுக.

உற்சாகமும் உணர்ச்சியும் கொண்ட இந்தத் திராவிட மாணவர் முதல் மாகாண மாநாட்டில், கொடி உயர்த்தும் பணியை எனக்கு அளித்த வரவேற்புக் கழகத்தினருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்: கொடியேற்றும் பணியை மகளிர்க்கே அளிக்கவேண்டும் என்ற வழக்கத்தினாலோ, அல்லது மாணவ மாநாட்டில் மாணவர்களுக்கே அந்தப்பணியை அளிக்கவேண்டும் என்ற காரணத்தினாலோ, எனக்குக் கொடியேற்றும் பணியைக் கொடுத்திருக்க வேண்டும் என்று நம்புகிறேன்.

தோழர்களே! கொடியேற்றம் என்பது சடங்குபோலிருந்தாலும், கட்சிக்கு முக்கிய சின்னமான கொடியைப்பற்றி சித்திரிக்கவேண்டியது மிக மிக முக்கியமல்லவா! கொடிதான் நமது லட்சியத்தின் அளவுகோல் என்று கூறினாலும் தவறாக முடியாது. உலக சமுதாயங்கள் பலப்பல கொடிகளைக்கொண்டு மிளிர்கின்றன. அவரவர்கள் குறிக்கோளைககாட்டும் வகையில் அவை அமைந்துள்ளன. அதே முறையில் நமது கொடி இன்றைய திராவிடத்தின் நிலையை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்துள்ளது.

நமது கொடியின் விளக்கத்தை நான் தரத்தவறினால் என் கடமையினின்றும் தவறியவளாவேன். இந்தக்கொடியைக் கண்டதும் யாவருக்கும் எழுச்சி ஏற்படும் வண்ணம், அது அமைந்திருக்கிறது. கறுப்புக்கொடியின் மத்தியில் சிகப்பு. அன்று வாழ்ந்த திராவிடம் இன்று தன்னிலை மறந்து, தன் மானமிழந்து, எடுப்பார் கைப்பிள்ளையாக வன்றோ இருக்கிறது. "இருட்டறையில் உள்ளதடா உலகம்" என்ற புரட்சிக் கவிஞரின் வாசகத்தைக் கொஞ்சம் மாற்றி "இருட்டறையில் உள்ளதடா திராவிடம்" என்று கூறினால் சரியான பொருத்தமாகிறது. இருட்டறையில் உள்ள திராவிடத்தை இருட்டு நிறத்தை விட்டு வேறு எந்த நிறத்தைக்கொண்டு குறிப்பது? இருட்டறையாம் திராவிடத்தில் சாதி இருக்கிறதென்பானும் இருக்கின்றான்; மருட்டுகின்ற மதத்தலைவர்கள் வாழ்கின்றார்; எதிரிக்கு நாட்டைக் காட்டிக்கொடுக்கும் துரோகியும் காணப்படுகிறான்; தன் மொழியை முன்னுக்குக் கொண்டுவர முயலாமல், வடநாட்டு இந்திமொழிக்கு வக்காலத்து வாங்கும் மேதாவிகளும் மேடையில் 'கர்ஜனை' புரிகின்றனர். வாணிபத் துறையில் வடநாட்டு பனியாக்கூட்டம் ஆட்சி புரிகின்றது. அரசியலில் ஆங்கிலேயனின் கொட்டுமுழக்கம் எட்டு திக்கும் எதிரொலிக்கிறது. இவ்வளவு கேவல, தாழ்ந்த, இழிந்த நிலையிலுள்ள திராவிடநாட்டை, திராவிட மொழியை இனத்தை, கலையைக் குறிக்க வேண்டுமானால் கறுப்புக்கொடி தவிர, வேறு எதுவும் பொருந்தாது; முடியாது.

ஆனாலும் சிலர் ஆச்சரியப்படலாம், மத்தியில் சிகப்பு இருக்கிறதென்று! ஆமாம்! தலைகுனிந்து தடுமாறி இருந்த திராவிடத்தில் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு வெள்ளி முளைத்தது சுய மரியாதை இயக்கம் என்ற பெயரால்! அந்த வெள்ளியின் வேலைதான் இந்தச் சிகப்பு நிறம்; புரட்சியின் சின்னம். அப்போதிருந்து புரட்சிவாடை வீசத் தொடங்கி புயலாக மாறிவருகிறது. வெள்ளிக்கு மூலகர்த்தா இங்கே வீற்றிருக்கும் வெள்ளித்தாடி பெரியார் ஈ.வெ. இராமசாமியவர்கள். அவர்களுடைய தொண்டின் பயன்தான் இன்று சிவப்பு நிறமாக, நமது கொடியில் பரிணமிக்கிறது. இந்தச் செந்நிறம் அதே அளவில் இருந்துவிடுமா? இருந்துவிட விடுவோமா? திருவத்திபுரம் மாநாட்டில் பெரியார் அவர்கள் கொடியைப்பற்றிக் குறிப்பிடும்போது "கொடிகள் காலத்துக் கேற்றவண்ணம் மாறவேண்டும்; அதுதான் வளர்ச்சிக்கு அடையாளம்" என்று பேசியுள்ளார்கள். சுத்தி அரிவாள் பழய காலம்; புலி, வில், கயல் போனகாலம்; ராட்டினம் ஒழிக்கப்படவேண்டிய காலம். ஆகையால் ஒரே சின்னத்தையே காலம் மாறினாலும், அறிவு வளர்ந்தாலும், சமுதாயம் சிறந்தாலும் கொண்டு வாழ முடியாது. அதுபோலத்தான் இந்தச் சிகப்பு நிறம் பெரிதாகிவரும். நமது இழிவு குறையக் குறைய செந்நிறம் சிறக்கும்; கறுநிறம் குறுகும். நமது உயரிய நிலையை, உன்னத லட்சியத்தை, அதுதான் திராவிடநாட்டை அடைந்தவுடன் கொடியிலுள்ள கறுப்பு நிறம் மறைந்துவிடும். சிகப்புநிறம் கொடி பூராவுமிருக்கும். அன்றுதான் நமது கொடி பூரண செங்கொடி. அதற்குமேலும் மாற்றம் ஏற்படலாம்; பிற்கால சந்ததியாரைப் பொறுத்தது.

மாணவ வீரர்களே! நமது கொடியைச் செங்கொடியாக்கவேண்டிய பொறுப்பு பூராவுமே உங்கள் தலையில் விழுந்துளது என்று சொல்வேன். சகல வழிகளிலும் மாணவர்கள் நமது இழிவை நீக்க முனையவேண்டும். இந்நாட்டு 'தேசியவாதிகள்' வடநாட்டு காந்தியாரை

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

கடல் கடந்த நாடுகளில் சேவை புரியும் பல்லாயிரக் கணக்கான இந்திய, பிரிட்டிஷ் துருப்புகள் இன்னும் அதிகமான சௌகரியங்களை அடைய ஆசைப்படுகின்றன.

★

எனவே

நமது துருப்புக்களை எவ்வளவு தூரம் சந்தோஷமாகவும்,
சௌகரியமாகவும் வைத்திருக்க முடியுமோ அதற்கு
மேலும் பணம் தேவை என்று

**மே. த. கவர்னரின்**

சைன்யநிதி, நிவாரணநிதி மிக உருக்கமாக வேண்டுகோள் விடுகிறது

தயவுசெய்து உங்களது பணத்தை
"சைன்ய நிதி, நிவாரண நிதி" என்று குறிப்பிட்டு
ஹானரரி டிரஷரர், மே. த. கவர்னரின் சௌகரியங்கள்,
கஷ்ட நிவாரண சகாயநிதி, C/o இம்பீரியல் பாங்க், இந்தியா
முதல் லைன் பீச், சென்னை என்ற விலாசத்துக்கு
அனுப்பிக் கொடுக்கவும்.

# குடி அரசு

1946-ளு மார்ச்சீ 2-௳

## திராவிட மாணவர் மாகாண மாநாடு

சென்றமாதம் 23, 24ந் தேதிகளில் திராவிடநாடு திராவிட மாணவர்கள் மாநாடு நடைபெற்றது. விவரம் வேறுபக்கம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

திராவிட மாணவர் மாகாண மாநாடு இதுவே முதல் மாநாடு எனலாம். மாநாட்டுக்கு தமிழ்நாட்டின் பல்வேறு பக்கங்களில் இருந்தும் வந்திருந்த மக்கள் சுமார் 5000 பேர்களுக்கு மேலிருந்தாலும் காலேஜ் வகுப்பு, எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பு மாணவர்கள் தொகை 2000 பேர்களுக்குக் குறையாதென்றே சொல்லலாம். மொத்தத்தில் கறுப்புச்சட்டையுடன் வந்தவர்கள் எண்ணிக்கை 1500 இளைஞர்களுக்குமேலேயே இருக்கும், இதில் மாணவிகளும் வந்து கலந்துகொண்டிருந்தது குறிப்பிடத்தகுந்ததாகும்.

மாநாடு, சேலம் காலேஜ் பிரின்சிபால் அறிஞர் எ. இராமசாமிக் கவுண்டர் அவர்கள் தலைமையில் நடந்தது என்பதோடு மற்றும் பல ஆசிரியர்களும் வந்து கலந்துகொண்டதானது மாநாட்டுக்கு மிகவும் பெருமையும், உற்சாகமும், ஊக்கமும் அளித்தது. இரண்டுநாளும் மாநாடு ஒரு மாபெரும் கொண்டாட்டமாக இருந்தது.

மாநாட்டில் கலந்துகொண்ட மாணவர்களில் பெரும்பாலோர் “நம் நாடும். இனமும், இன்று இருக்கும் நிலையில், நாம்நம் வாழ்நாளில் நல்ல நாட்களை பயனற்ற பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கழித்து அடிமைத்தனம் கற்றுக்கொண்டு இருப்பது பெரியதொரு நாட்டுத்துரோகமும், இனத்துரோகமுமான செய்கை” என்று கருதி துயருற்ற வண்ணம் காணப்பட்டதானது மிகவும் குறிப்பிடவேண்டிய காரியமாகும். அடுத்தாற்போல் அங்கு தாண்டவமாடிய உணர்ச்சி என்னவென்றால் இந்தமாநாடு முடிந்தவுடனே தங்களுக்கு ஏதாவது ஒரு பணிஆற்ற தலைவர் அனுமதி அளிக்கமாட்டாரா?என்கின்ற ஆர்வமும் எழுச்சியும் பொங்கி வடிந்ததேயாகும்.

மாநாட்டுத்தலைவர் பேசும்போது இனி நடைபெறும் நாடு, மொழி கிளர்ச்சிகளில் மக்கள் சிறைசெல்ல நேருமானால் பெரியாரை சிறைசெல்ல விடக்கூடாது என்றும் அது ஆசிரியர் மாணவர் உலகத்திற்கு இழிவுஎன்றும்,நாமே சாதாரண மக்களுக்கும் முன்னதாக சிறையில் இருக்க வேண்டும் என்றும் நாடு, இனம், மொழி இவைகளைக் காப்பாற்றுவதற்கு சிறைசெல்லவும்,ஆவிகொடுக்கவும், வாய்க்கும் வாய்ப்பே மக்களுக்கு ஏற்படும் எல்லா நல் வாய்ப்புகளையும்விட மேலானது என்றும் சொன்னவுடன், மாணவர்களின் ரத்தம் தூய்மை அடைந்து உள்ளம் துடிக்க ஒரே கூச்சலாக மாணவர்கள் யாவரும் “பெரியாரை இனி சிறைசெல்ல விடோம், நாங்கள் யாவரும் சென்றபிறகுதான் அவருக்கு வாய்ப்பளிப்போம்” என்று ஆரவாரித்ததானது மாபெரும் ஆனந்தக் காட்சியாய் இருந்தது.

பிறகு பெரியார் அவர்கள் அங்கிருந்த ஆசிரியர்களையும்,மாணவர்களையும் பாராட்டிப் பேசியதில் “இங்குள்ள ஆசிரியர்களின் உணர்ச்சி போதும், ஊக்கம் போதும், வெளியில் உள்ள மற்ற ஆசிரியர்களது உணர்ச்சியும் பெற்றோர்களது உணர்ச்சியும் இருக்குமானால் நான் மாணவர்களை இந்த முயற்சியில் சிறிதும் கலந்துகொள்ள இடம் கொடுக்கமாட்டேன் என்றும்,இன்று தமிழ்நாட்டுக்கும், தமிழர் இனத்திற்கும் சரியான எதிரிகள்—தமிழ்நாட்டை, இனத்தை இவ்வித இழிநிலைக்கும் நாதிஅற்ற நிலைக்கும் கொண்டு வந்தவர்கள் திராவிட ஆசிரியர்களும் வக்கீல்களும் இவர்களிடம் மரியாதை காட்டின பெற்றோர்களுமாவார்கள் என்றும், திராவிடவக்கீல்கள் நம்எதிரிகளின் லைசென்சு பெற்ற அடிமைகள் ஆவார்கள் என்றும், திராவிட ஆசிரியர்கள் எதிரிகளின் கூலிக்கு அமர்த்தப்பட்ட நிபந்தனை அற்ற அடிமைகள் ஆவார்கள் என்றும், நான் சொன்னால் இதில் கடுகளவும் அதிகமாகச் சொல்லப்பட்டதாக ஆகிவிடாது.” என்றும் குறிப்பிட்டுவிட்டு “அதனாலேயே இப்படிப்பட்ட அடிமைகளின் பிள்ளைகளாகிய நீங்களாவது அவர்கள் குற்றத்துக்கு பரிகாரமும், பிராயச்சித்தமும் செய்வதின் மூலம் பள்ளிகளை வெறுங்கள் என்று சொல்லுகிறேன்” என்று சொன்னார். உண்மையில் பார்க்கப்போனால் நம் வக்கீல்கள் தன்மை, ஆசிரியர்கள் தன்மை மிகமிகக் கேடாகவும், இழிவாகவும் இல்லை என்று யார்தான் சொல்லமுடியும்?

சாதாரணமாகத் தமிழ்நாடு கல்லூரித் தலைவர்களை எடுத்துக்கொண்டால் நம் “இராமசாமியாரைப்போன்ற ஒன்று, இரண்டு தவிர்த்த மற்ற பிரின்சுபால்கள்” திராவிடப்பிள்ளைகளை அடக்குவதோடு தோழர்கள் அண்ணாதுரையோ, இராமசாமியோ, சர் இராமசாமிமுதலியார் மகன் டாக்டர் கிருஷ்ணசாமியோ அதாவது சுயமரியாதைக்காரர் அல்லாதவரும் திராவிடக் (ஜஸ்டிஸ்)கட்சி அல்லாதவருமான டாக்டர் கிருஷ்ணசாமியோ மாணவர்களால் அழைக்கப்பட்டாலுங்கூட காலேஜ்களில் அனுமதிக்காமல் தடுப்பதும், மீறி மாணவர்கள் கிளர்ச்சி செய்து அழைத்தால் அவர்கள் வரும் சமயத்தில் அவர்களை அவமதிப்பது போல் தாங்கள் மறைந்துகொள்வதும், பேச்சுக்களுக்கு நிபந்தனைகள் ஏற்படுத்தி பல்லைக்கெஞ்சுவதும் விளம்பரம் செய்யவேண்டாம் என்று கெஞ்சுவதும் ஆகிய இழி காரியங்கள் செய்யத் தவறுவதில்லை. ஆனால் இதே (பிரின்ஸ்பால்) நபர்கள் தோழர்கள் சத்தியமூர்த்தி, ராஜகோபாலாச்சாரியார், சி. பி. ராமசாமி அய்யர் போன்ற நம் பிறவி எதிரிகள் வந்தால் அவர்களை வரவேற்பதும் அவர்கள் இடம் படத்தில் இராமனிடம் குரங்கு நிற்பது போல் நின்றுகொண்டு அஞ்சலி செய்வதும், குலகுருபோல் சம்பந்தம் வைத்துக்கொள்வதுமான இழி செய்கைகளைப் பார்த்தால் மான

முள்ள மக்களுக்கு இவர்களிடம் படிப்பதுபோன்ற ஈனத்தனம் வேறு இல்லை என்றே தோன்றலாம் என்று சொல்லலாம். நம் வக்கீல்களில் பெரும்பாலோரின் நாடு, இனம், மொழிப்பற்று, நடத்தை இதற்குப்பின் வாங்கினதல்ல என்றே சொல்லலாம். இவர்கள் இப்படி இருந்தால் இனி மற்றப் பெற்றோர்கள் எப்படி இருப்பார்கள் என்பது சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டியிருக்காது.

ஆகவே இந்தப் பொறுப்புவாய்ந்த மக்கள் ஆசிரியர்கள், வக்கீல்கள், மிராசு, வியாபாரி பெற்றோர்கள் பலரும் நாட்டுப்பற்று, இனப்பற்று இல்லாத இழிவான சுயநலப்பற்றுக்காரர்களாக ஆகிவிட்டபடியால் இவர்களுக்குப் பிள்ளைகளாய்ப் பிறக்க நேர்ந்த இழி சம்பவத்திற்குஆக இப்பிள்ளைகள் அதற்குப் பரிகாரம் செய்ய இப்படிப்பட்ட பள்ளிகளை வெறுத்தாவது இனத் தொண்டாற்றுவது எப்படியும் கேடான காரியமாகாதென்று சொல்லலாம்.

முடிவில் பெரியார், மாணவர்களுக்கு நல்லுரை வழங்கும்போது "மாணவர்கள் சிறைசென்று திரும்பவேண்டியது அவர்களுக்கு ஒரு பெருமையும் பெருஞ் செல்வவாய்ப்புமாகும். இனிவரும் உலகத்தில் சிறைசென்றவர்கள் தான் மேன் மக்களாகவும், செல்லாதவர்கள் கீழ் மக்களாகவும் திகழப்போகிறார்கள் என்பேன்" "வாழ்க்கையில், தரத்தில் நாலாந்தர மக்களாய் இருந்தாலும் சிறை சென்று வந்தால் முதல்தர மக்களுக்கும் முன் அணியில்நிற்பவர்கள் என்பதாக மதிக்கப்படுபவர்களாகிறார்கள். இனி ஒரு 25-ஆண்டுகளுக்காவது இந்த நிலை இருந்து தான்வரும்"

"இனி பணத்திற்குமதிப்பு இருக்காது, மதிக்கும் மதிப்பு இருக்காது, பணமும், மதியும் இருந்தாலும், மதிப்பு இருக்காது இவ்வளவுதானா!"

"நம் லட்சியமடைய, இழிவு நீங்கஇனி காலித்தனத்துக்கும் நீங்கள் தயாராய் இருக்கவேண்டும்" என்கின்ற காலம் வந்துவிட்டது. எப்படிப்பட்ட காலித்தனத்தையும் சமாளிக்கச் சக்தி வேண்டும். இன்று மக்கள் எதை மதிக்கிறார்களோ அதைசெய்து மதிப்பு பெற வேண்டும். அதன் பிறகுதான் மக்களைத் திருத்தலாம். அவற்றால் ஏற்படும் அவமானத்திற்கும் மானக்கேட்டிற்கும் பயப்படக்கூடாது. அன்றியும் நமக்குக் கட்டுப்பாடும், இராணுவ கீழ்படிதல் தன்மையும் வேண்டும். அதாவது,

நாம் நமது லட்சியத்தை, வாழ்க்கைத் தன்மையை நிர்ணயித்துக் கொள்வதில் நம் அறிவு, சுதந்திரம் ஆகியவைகளை நன்றாய்ப் பயன்படுத்தவேண்டும். அதை நிர்ணயித்த பிறகு அதற்குஆன திட்டங்களை நிறைவேற்றுவதில் தலைவருக்கு கீழ்ப்படிதல் என்கின்ற ஒரு குணம்தான் இருக்கவேண்டுமே ஒழிய திட்டம் வகுப்பதில், நிறைவேற்றுவதில் ராணுவப்படையினர் போன்று, சொந்தப்புத்தி (இஷ்ட)ப் பிரயோகமும், சுதந்திர முயற்சியும் இருக்கக்கூடாது. அப்படி இருக்கவேண்டியவர்கள் வேறு தன்மையில் இருந்துகொண்டு தங்கள் இஷ்டப்பட்ட தொண்டாற்றலாம்" என்று சொன்னது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதற்கு உதாரணமாக தோழர்கள் சர் ராமசாமி முதலியார், சர் சண்முகம் செட்டியார், சர் பி. டி. ராஜன் போன்றவர்கள் தங்கள் சொந்தப் புத்தியின்படி சுதந்திரத்தோடு தொண்டாற்றுவதாகச்சொல்லிக்கொள்ளுபவர்கள். அவர்களுடைய சுதந்திரத்திற்கும், சொந்தப் புத்திக்கும் இடம்தந்து நம் இனத் தொண்டாற்ற நாம் இணங்கினால் நம் நிலை என்ன ஆகும் என்பதை சிந்தித்தால் பெரியார் சொன்னதின் உண்மை விளங்கும். அதுபோலவே தோழர்கள் பி.பாலசுப்பிரமணியம், கண்ணப்பர், சைமன் ராமசாமி போன்றவர்களும் தொட்டதற்கெல்லாம் தங்கள் சொந்தப் புத்தியும் சுதந்திரமும் கொண்ட தொண்டாற்றவேண்டும் என்று மற்றொரு பக்கம் கூறுகிறார்கள். இவர்களது சொந்தப்புத்தியும் சுதந்திரமும் கொண்டு கலந்து நாம் தொண்டாற்றினால் நம் இயக்கத்தின் கதி என்ன ஆகும்?

ஆகவே கொள்கையில் ஒப்புக் கொண்டாலும் திட்டங்களில் ஒவ்வொன்றுக்கும் சொந்தப்புத்தி; சுதந்திரம் கொண்டே தொண்டாற்ற முடிகிறவர்கள் கலந்தால் எப்படிப்பட்ட இயக்கமும், பாழடைந்துதான்தீரும் என்பது நமது உறுதி. இதற்கு நம் கட்சியின் 20-வருட அனுபவமே போதுமானதாகும்.

அதனால்தான் பெரியார் அடிக்கடி இயக்கத்திற்கு தொண்டாற்ற வருகிறவர்கள், தன் தலைமையில் நடப்பதாகச் சொல்லிக்கொள்ளுகிறவர்கள் அவர்கள் சிறைசெல்லத் தயாராய் இருக்கும் தியாகத்தை விட தனது சொந்தப்புத்திப் போக்கைத் தனது சொந்த சுயேச்சை வழியை இன்னும் சொல்லவேண்டுமானால் தனது சொந்த தன்மான முக்கியத்தையும் தியாகம் செய்பவர்களாக இருந்தால் தான் பயன்படும் என்று, எப்படிபட்டவர்கள் கூட்டத்திலும் பல நாட்களாகப் பேசி வருகிறார்.

மற்றும் இத்ற்கு எடுத்துக்காட்டாக இன்று காங்கிரஸ் கட்சியில் அதன் பயன் எப்படி இருந்தாலும் இன்று காங்கிரஸ்காரர்களுக்கு ஏற்பட்டுள்ள பலன், வலிவு பெரிதும் சொந்தப் புத்தியையும் தன்மானத்தையும் தியாகம் செய்த

## கறுப்புச் சட்டைப் படை அமைப்பு

படையில் சேர்வதற்காக மனுபாரங்கள் பெற்ற தோழர்கள் உடனே பூர்த்தி செய்து அனுப்பவும்.

விரைவில் க. ச. படை மாகாண மாநாடு நடத்த இருப்பதால் இதுவரை படை அமைக்கப்படாத இடங்களில் உடனே அமைத்துதவவும்.

படையில் சேர, மனு பாரம் வேண்டியவர்கள் "ரிப்ளை" கார்டில் எழுதவும்.

குறிப்பு:- 'ரிப்ளை' கார்டில் ரிப்ளை பாகத்தில் விலாசம் எழுதாமல் வெறும் கார்டாக அனுப்பவும்.

க. ச. ப. அமைப்பாளர்,
குடி அரசு ஆபீசு, ஈரோடு.

வர்களின் கூட்டுத்தொண்டே ஆகும்.

தோழர் காமராஜருக்கு காந்தியார் சமீபத்தில் தெரிவித்ததும் இதுவே யாகும்.

அதாவது,

"ஆம் நான் அப்படித்தான் ('கிளிக்' என்றுதான்) சொன்னேன். அதை சொன்னதை பின் வாங்கிக்கொள்ளமாட்டேன். உனக்கு இஷ்டமிருந்தால் என்னைப் பின்பற்று இல்லாவிட்டால் வேண்டாம்"

என்று சொல்லிவிட்டார்.

ஆனால் தோழர் காமராஜர் குறைபட்ட பிரச்சினை ஒரு சுதந்திரத்தையோ சுயபுத்தியையோ பற்றிய பிரச்சினைகூட அல்ல, அது பெரிதும் சுயமரியாதையைப் பற்றிய பிரச்சினையாகும் என்று சொல்லலாம். பல காங்கிரஸ்காரர்களும் அப்படியே சொன்னார்கள். அப்படி இருக்க காந்தியார், "ஆம் அப்படித்தான்; இருந்தால் இரு, போனால் போ. நீ ராஜினாமா கொடுத்தது என் தலைமையை அவமதித்துச் செய்த காரியமாகும். இதை நான் லட்சியம் செய்யாமல் விட்டிருக்க முடியும். ஆனால் கொள்கை பாதகமடையும் அதனால் பதில் சொல்ல வேண்டியவனாகிறேன்" என்று மிக்க உதாசீனம் செய்திருக்கிறார். யாரை என்றால், தோழர் பி. பாலசுப்ரமணியம், சைமன் கம்பெனி போன்றவரை அல்ல. தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டி தலைவரை. அப்படிப்பட்ட தலைவர் இதற்கு பேச்சு மூச்சு காட்டாமல் இருந்து தொண்டாற்றுகிறார், காந்திமகானுக்கு ஜே! என்கிறார். இதுதான் கட்டுப்பாடு என்பதற்கும் சொந்தப்புத்தி சுதந்திரம் சுயமரியாதை ஆகியவைகளைத் தியாகம் செய்து தொண்டாற்றுவது என்பதற்கும் சரியான உதாரணமாகும்.

அவரை, காமராஜரை பலர் குறை கூறலாம். ஆனால்குறைகூறுகிறவர்களின் லட்சியம் என்ன? அவரின் (காமராஜரின்) லட்சியமென்ன? என்பதை சரிவர உணர்ந்தவர்கள் குறைசொல்ல மாட்டார்கள். அவரை குறை கூறுவதானால் அந்தக் குறைக்கு

# பெரியார் ஈ. வெ. ரா. சுற்றுப்பிரயாணம்

1-3-46 வெள்ளிக்கிழமை இரவு புறப்பட்டு திருச்சி செல்கிறார். 2-3-46 உறையூர் திராவிடர் கழக ஆண்டுவிழாவிற்கும், 3-3-46 சோழங்க நல்லூரில் நடைபெறும் திருச்சி ஜில்லா திராவிடர் கழக மாநாட்டிற்கும், 4-3-46 திருச்சியில் நடைபெறும் திராவிடர் கழக நிதி வசூல் கமிட்டிக் கூட்டத்திற்கும் சென்றுவிட்டு 5ந் தேதி முதல் இரண்டு மூன்று நாட்கள் சென்னையில் தங்குவார். 8ந் தேதி வாக்கில் ஈரோடு திரும்பலாம்.

---

இலக்காகாதவர்கள் தமிழ்நாட்டில் ஒரு காங்கிரஸ்காரரும் இருக்க முடியாது என்று சொல்லாம்.

ஆகவே பெரியார் மாணவர்களுக்குச் செய்த அறிவுரை பெரிதும் இந்த சந்தர்ப்பத்துக்கு ஏற்றதாகும் என்போம்.

மாநாடு எதிர்பார்த்தற்குமேல் சிறப்பாகவே நடந்தது. இதற்குப் பெருமுயற்சி செய்தவர் தோழர் அ. ஆறுமுகமவர்களாகும். மற்றும் தோழர்கள் பலர் பெரும் பங்கெடுத்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே மாணவத் தோழர்கள் இம்மாநாட்டின் பயனாய் பெற்ற உணர்ச்சியையும் எழுச்சியையும் ஏப்ரல் விடுமுறையில் நன்றாய் பயன் படுத்திக்கொள்ள வேண்டும். அவர்கள் தமிழ்நாட்டு கிராமங்கள் யாவும் சுற்றிப் பிரசாரம் செய்யவேண்டும்.

சென்ற ஆண்டு போலவே இவ்வாண்டும் பிரசார மாணவர்களுக்கு ஈரோடு, திருச்சி, சென்னை, சேலம் (ஏற்காடு) ஆகிய ஏதாவது ஒன்று அல்லது இரண்டு இடங்களில் பயிற்சிசாலைகள் வைத்து ஒருவாரம் அல்லது 10நாட்களுக்கு பயிற்சியளிக்கப்படும். தகுதியும், ஆர்வமும் உள்ளவர்கள் முன்கூட்டியே தங்கள் பெயர்களைக் கழக காரியாலய காரியதரிசிக்குத் தெரிவித்துவிடவேண்டுகிறோம்.

இவ்வாண்டு சென்ற இரண்டாண்டுகளைவிட சிறப்பாக எதுவும் நடத்த ஏற்பாடுசெய்யப்படலாம்.

# சென்னை எழும்பூர் ஏரியில் திராவிடர் கூட்டம்

## பேரியார்—அண்ணாதுரை சொற்பொழிவு

சென்னை புரசை திராவிடர் கழகத்தின் ஆதரவில் 11-2-46 மாலை 6மணிக்கு சென்னை எழும்பூர் ஏரியில்(ஸ்பார்ட்டாங்) ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. பத்தாயிரக்கணக்கான பொதுமக்கள் கூடியிருந்தார்கள் ஒலிபெருக்கி அமைக்கப்பட்டிருந்தது. கூட்டம் கூடுவதற்குமுன் பல தோழர்கள் இயக்கக் கீதங்கள் பாடினார்கள். கூட்டத்திற்கு தோழர் என். எஸ். தங்கரூபன் தலைமை வகித்தார். முதன்முதலாக தோழர்கள் கே. அன்பழகன், ஜனார்த்தனம் பேசியபின் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் நீண்ட கைதட்டுதலுக்கிடையில் எழுந்து திராவிடர் இயக்கம் செய்து வரும் வேலைகளைப்பற்றியும், திராவிட நாடு பிரியவேண்டியதின் அவசியம் பற்றியும் பேசிவிட்டு, காங்கரசார், திராவிடர் இயக்கத்தையும், திராவிடத் தலைவர்களையும் சர்க்கார் தாசர்களென்றும், சர்க்காரால் உண்டாக்கப்பட்ட கட்சியென்றும் கூறி வருவதைக் கண்டித்து, காங்கரஸ் வெள்ளைக்கார சர்க்காரால் உண்டாக்கப்பட்டதென்றும், சர்க்கார் நன்மைக்காகவே ஏற்பட்டதென்றும் ஹியூம் என்ற ஆங்கிலேயர்தான் உண்டாக்கினாரென்றும், காங்கரசுக்கு பல ஆண்டுகள் வெள்ளைக்காரர்களே தலைவர்களாக இருந்தார்களென்றும், காங்கரஸ் வெள்ளைக்காரனுக்குப் பிறந்ததென்றும், காங்கரசுக்கும் வெள்ளைக்காரனுக்குமுள்ள தொடர்பை அறுத்துக் கொள்ள முடியாதென்றும், திராவிடர் கட்சியாகிய ஜஸ்டிஸ் கட்சி ஆரம்பிக்கப்பட்டதின் நோக்கத்தையும் மிக உணர்ச்சியோடும் விளக்கமாகவும் பேசினார். பின் பெரியார் அவர்கள் தம்மை கேட்கப்பட்ட கேள்விகளுக்கு தக்க பதிலளித்தார்.

பின் தோழர் சி. என். அண்ணாதுரை எம். எ. அவர்கள் பெரியார் பேசியதைப் பற்றி சுமார் 1-மணிநேரம் விரிவாகவும் விளக்கமாகவும் உணர்ச்சியோடும் பேசினார்.

தலைவர் முடிவுரையுடனும் வந்தனோபசாரத்துடனும் கூட்டம் இனிது கலைந்தது.

# தென்னாற்காடு மாவட்ட திராவிடர்கழக 3வது மாநாடு

2-3-46 சனிக்கிழமை தளபதி சி என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில் விருத்தாசலத்தில் நடைபெற்றது.

ரோஜா முத்தையா

## திராவிடர்கழக நிதிக்கமிட்டிக் கூட்ட அறிவிப்பு

★

4-3-46 திங்கள் காலை 10 மணிக்கு திருச்சியில், தோழர் டி.பி. வேதாசலம் அவர்கள் இல்லத்தில் திராவிடர் கழக நிதிக்கமிட்டிக் கூட்டம் நடைபெறும்

நிதிக்கமிட்டி உறுப்பினர்கள் யாவரும் வருமாறு வேண்டுகிறேன்.

என். அர்ச்சுனன்,
நிதிக்கமிட்டித் தலைவர்.

## நடக்க இருப்பவை

● 5-3-46 மாலை 7-மணிக்கு வட சென்னை திராவிட நடிகர் கழகத்தில் வட சென்னை திராவிடர் மாநாட்டு காரியக்கமிட்டிக் கூட்டம் நடைபெறும்.

● 3-3-46 சாத்தூர் பெரியார் மைதானத்தில் கிருஷ்ணன் பாகவதர் விடுதலை வாரத்தையொட்டி சர்வகட்சி பொதுக் கூட்டம் நடைபெறும். பல தோழர்கள் பேசுவார்கள்.

● 5-3-46 மாலை 6-30 மணிக்கு சேலம் அரிசிபாளையத்தில் தோழர் எ. சித்தையன் தலைமையில் செல்வம் நினைவு நாள் கூட்டம் நடைபெறும்.

● 3-3-46 மாலை 6-மணிக்கு திருவாரூர் திராவிடர் கழக கட்டிடத்தில் நாகை தாலுக்கா திராவிடர் கழக கமிட்டிக் கூட்டம் நடைபெறுமென காரியதரிசிகள் சி. சிவசங்கரன், கோ. அண்ணாமலை தெரிவிக்கின்றார்கள்.

● 4-3-46 திங்கள் மாலை 6மணிக்கு பொன்மலை திராவிட வாலிபர் கழக தோட்டத்தில் தோழர் ஈ. வி. கே. சம்பத் தலைமையில் செல்வம் நினைவுநாள் நடைபெறும். தளபதி அண்ணாதுரை, டி. கே. சீனிவாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

● 10-3-46 காலை 10 மணிக்கு மம்சாபுரத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுக்கா திராவிடர் கழக கமிட்டிக்கூட்டம் நடைபெறுமென காரியதரிசி ஆர். டி. சவரிதாஸ் அறிவிக்கிறார்.

● 9-3-46 மாலை 5-30 மணிக்கு சென்னை பீபிள்ஸ் பார்க் மைதானத்தில் தோழர் சி. டி. டி. அரசு தலைமையில் செல்வம் நினைவுநாள் நடைபெறும். தளபதி அண்ணாதுரை, அன்பழகன், சத்யவாணி முத்து ஆகியோர் பேசுவார்கள்.

## சென்னை ஜில்லா 2-வது சர்க்கிள் 1-வது திராவிட மாநாடு

**17-3-46** ஞாயிறு காலை ஆரம்பமாகும்

தலைவர்: என். வி. நடராஜன், திறப்பாளர்: கே. அன்பழகன் எம். ஏ., கொடியேற்றுபவர், என். எம். சுப்ரமணியம்.

பெரியார் ஈ. வெ. ரா., அண்ணாதுரை, நெடுஞ்செழியன் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

## திராவிடர் கழகத் திறப்புவிழா

3-3-46 ஞாயிறு மாலை 5-30 மணிக்கு சென்னை வண்ணாரப்பேட்டை எஸ். பி. ஜயராம் நாடார் மைதானத்தில் தோழர் என். ஜீவரத்தினம் தலைமையில் நடைபெறும். திறப்பாளர்: தில்லை வில்லாளன், கொடியேற்றுதல், கே. வீரமணி, சொற்பொழிவாளர்கள்: கே. அன்பழகன், என். வி. நடராசன், என். எம். சுப்ரமணியம், பி. ஏ. கே. பழனிச்சாமி மற்றும் பலர்.

## மாணவர் பகுதி

சென்னை திராவிட மாணவர் மன்ற முதல் ஆண்டுவிழா 8-2-46 வெள்ளி மாலை கோகலேமண்டபத்தில் ஆங்கிலப் பேராசிரியர் வரதராஜன் பி. ஏ., தலைமையில் நடைபெற்றது. தளபதி சி. என். அண்ணாதுரை, தோழர்கள் ஜனார்த்தனம், அன்பழகன், மா. குமாரசாமி முதலியோர் சொற்பொழிவாற்றினர்.

திருத்துறைப்பூண்டி திராவிட மாணவர் கழகம், திராவிடர் கழகம் இவைகளின் சார்பில் 18-2-46மாலை தோழர் பி. எஸ். தியாகராசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் கி தியாகராசன், காளியப்பன், பாவலர் பாலசுந்தரம், சனார்த்தனம் எம். ஏ., அரங்கண்ணல் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

o o

கல்போது முதலி பட்டியில் பழைய மாணவர் சங்கக் கட்டிடத் திறப்புவிழா 10-2-46 காலை எஸ். பழனிச்சாமி பி. ஏ., பி. எல்., தலைமையில் நடைபெற்றது. பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர்.

o o

மன்னார்குடியில் 27-1-46ல் தோழர்கள் மா. இராமச்சந்திரனைத் தலைவராகவும், பி. கிருஷ்ண மூர்த்தியைச் செயலாளராகவும் கொண்ட மாணவர் கழகம் அமைக்கப்பட்டது.

o o

திருப்பத்தூர் (வ. ஆ.) திராவிடமாணவர் கழகத்தின் சார்பில் தோழர் பி.

## செல்வம் நினைவு வாரம்

மார்ச் 1ந் தேதி முதல் 9ந்தேதி வரையில் கொண்டாடுக. திராவிடர் நாட்களில் ஒன்றான, சர் பன்னீர் செல்வம் அவர்களின் நினைவு வாரத்தில் திராவிடர் கழக உறுப்பினர் சேர்க்கும் வேலையில் கழகத் தோழர்களும், கறுப்புச் சட்டைப் படையினரும் சலியாது ஈடுபடுமாறு வேண்டுகிறோம். செல்வம் நினைவு நாளை மேற்குறிப்பிட்ட காலத்தில், முடிந்தவரையில் உள்ளூர்த் தோழர்களையே கொண்டாவது கொண்டாடுமாறு கோருகிறோம்.

பெரியசாமி பி. ஏ., பி. எல்., தலைமையில் "புராணங்களை ஆதரிப்பதா?" என்ற சொற்போட்டி நடைபெற்றது. பல தோழர்கள் ஆதரித்தும், எதிர்த்தும் பேசினர்.

o o

ஈரோடு திராவிட மாணவர் கழகக் கூட்டம் 16-2-46ல் தோழர் ஈ. பாலகுரு தலைமையில் நடைபெற்றபொழுது பலர் சொற்பொழிவாற்றினார்கள். தோழர் ம. சிங்காரவேலு மறைவுக்கு அநுதாபம் தெரிவித்தும், கலைஞர்களை விடுதலை செய்யக் கேட்டும், கழகத்திற்கு அங்கத்தினர்கள் சேர்ப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டன.

o o

இராசீபுரம் மாணவர் கழகத்தின் சார்பில் 15-2-46ல் தோழர் ஆ. இரத்தினசபாபதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பல தோழர்கள் "மாணவரும் எதிர்காலமும்" என்பதுபற்றிப் பேசினர்.

o o

திண்டிவனத்தில் 14-2-46ந் தேதி தோழர் கோ. ஆதிசேசவன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் எம் எ. வில்லனைத் தலைவராகவும் மற்றும் பலரை நிர்வாக உறுப்பினர்களாகவும் கொண்ட திராவிட மாணவர் கழகம் அமைக்கப்பட்டது.

o o

திருச்சி, புத்தூர் பிஜப்ஹீயர் ஹைஸ்கூல் மாணவர்கள் கூட்டம் 31-1-46ல் நடைபெற்றபொழுது கலைஞர்கள் விடுதலை கோரித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

ராசீபுரம் பகுத்தறிவு சங்க சார்பில் 4-2-46ல் காட்டூர் அஞ்சி தலைமையில் தோழர்கள் கே. எம். முத்து, கருப்பணன், நாராயணசாமி ஆகியோர் பேசினர்.

## சென்னை ஜில்லாவில் உறுப்பினர் சேர்த்தல்

10-3-46 முதல் ஒரு வாரம்வரை காலை மாலை நேரங்களில் இவ்வாண்டிற்கு உறுப்பினர் சேர்க்கும் வேலையை சென்னையிலுள்ள ஒவ்வொரு வட்ட திராவிடர் கழக கிளைச் சங்க நிர்வாகிகளும் மற்ற தோழர்களும் துவங்க வேண்டுமெனக் கோருகிறேன். சென்னை ஜில்லாவில் குறைந்தது 10 ஆயிரம் உறுப்பினர்களாவது சேர்க்கப்பட வேண்டும்.

என். வி. நடராசன்,
பொதுக்காரியதரிசி.

## இயக்கச் செய்திகள்

புதுக்கோட்டை 7-2-46ல் விதவா விவாக சங்க சார்பில் தோழர் எஸ். மீனாட்சி சுந்தரம் பி. ஏ., எல். டி., தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் முருகப்பா மரகதவல்லி, டி. கே. சீனிவாசன், நா. அன்பழகன், சி. ராமசாமி முதலியவர்கள் பேசினார்கள்.

o o

நாகை வெளிப்பாளையம் மணி பகுத்தறிவுக்கழகக் கமிட்டிக்கூட்டம் 10-2-46 தேதி தோழர் டி. பி. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்று ஆண்டுவிழா நடத்துவதுபற்றி யோசிக்கப்பட்டது.

o o

திருச்சி பெரியார் இளைஞர் கழகத்தில் 3-2-46ல் தேர்தல் நடைபெற்று தோழர்கள் முத்துசாமி, வேணுகோபால், அண்ணாமலை ஆகியோர் முறையே தலைவர், துணைத்தலைவர், செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

o o


விருதுநகர் திராவிடர் தொண்டர் படையை கறுப்புச்சட்டைப் படையாக மாற்றி 27-1-46ல் தோழர் எஸ். சுப்பையா தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் ஆசைத்தம்பி, மாரியப்பன், பாண்டியன், பாஸ்கர் முதலியோர் பேசினார்கள்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இங்குக் கொணர்ந்து பொம்மலாட்டம் காட்டினர். இந்துஸ்தானிக்கு ஏற்ற இடம் இதுதான் என்றும் பறையறைந்தனர். ஆனால் காந்தியார் இங்கு வந்தது ஆரிய—திராவிடப் போராட்டத்தில் ஆரியர் பக்கம் தீர்ப்பளிக்க என்பதை அவர்கள் அறியவில்லை. பாபம் இன்றாவது உணர்ந்திருப்பார்களா என்றுதான் ஐயம் எழுகிறது. ராஜாஜி உங்கள் மாணிக்கம்; அவர்தான் பிரதம மந்திரியாவதற்குச் சகல குணமும் கொண்டவர் என்று காந்தியார் வெளிப்படையாக கூறிவிட்டார். அதைச் சரியாக உணர்ந்துகொள்ளாத இந்நாட்டுத் தேசியப் போர்வையில் உலவும் திருப்பிரமங்கள் நம்மை வகுப்புவாதிகள் என்று வாய் கோசாமல் கூறுகின்றனர். உண்மையை உணர மறுக்கும் அவர்களிடம் நமக்கு ஆத்திரம் பிறக்கவில்லை; அனுதாபமே உண்டாகிறது! ஏனெனில் என்றாவது ஒருநாள் அவர்களும் சரியான பாதைக்கு வந்தே தீருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஆகவேதான், மாணவ மணிகளாகிய நீங்கள், நாடு நலிந்துள்ள தன்மையைப் போக்க போராடவேண்டும். மனிதனை மனிதனாக்கப் பாடுபடவேண்டும். ஒருவன் தேவனின் முகத்தில் பிறந்தவன்; இன்னொருவன் பாதத்தில் பிறந்தவன்; முன்னவன் பிராமணன் பின்னவன் சூத்திரன் என்ற அவலச் சொல்லை அடியோடழித்து ஒழிக்கவேண்டும். என் மாணவர்களால் முடியுமென்றால், உலகத்தில் ஏற்பட்ட பல புரட்சிகளுக்கு முதுகெலும்பு போன்றிருந்தவர்கள் அவர்கள்தாம். இதனை உலக வரலாறு அழகாக உணர்த்தும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஜாதி வேறுபாடு நீக்கி சம உணவுச் சாலை ஏற்படச் செய்தது திராவிட மாணவ இயக்கமே, குடந்தையில் குமுறி எழுந்த ஜாதி அகம்பாவத்தை அடக்கி, அங்கும் சமவாழ்க்கையைக் கொணரப்பாடுபட்டது திராவிட மாணவ இயக்கமே. பலப்பல பள்ளிகளில் வட நாட்டுத் தலைவர்கள் படமிருந்தன. தென்னாட்டுத் தலைவர்கள் படம் ஒன்றும் இருந்ததில்லை; அப்படியிருந்தால் அது அய்யர் அய்யங்காருடைய படமாகத்தானிருக்கும். ஆனால் இன்று அந்த நிலையை மாற்றிவருவது நமது இயக்கம். மேலும் பல பயன் தரத்தக்க வேலைகள், பொறுப்புகள் நம்மீது சுமந்துள்ளன. அவைகளை நாம் மகிழ்ச்சியுடன் ஏற்றுத் தலைவர் பெரியார் அவர்கள், தளபதி அண்ணாதுரை ஆகியவர்கள் வகுக்கும் பாதையில் நின்று போரிடுவோம் உரிமைக்காக. சில சுயநல துரோகிகளால் பெரியார் அவர்களுக்கு ஏற்படும் இடைஞ்சல்களைப் போக்கிப் பெரியார் அவர்களையே முழுதும் பின்பற்றி நடக்கும், திராவிட மாணவ இயக்கம் என்று அவர்களுக்கு உறுதி கூறுகிறேன்.

ஆகவே, இளைஞர்களே! இகழ்ச்சி நேர்ந்தால் இறப்போம் என்றும் புகழ்ச்சியே எம்பூணாம் என்றும் வையம் ஆண்ட வண்டமிழ் மாபே! இன்று கொடியில் காணப்படும் இழிவினைப் போக்கி கொடியைச் செங்கொடியாக்கி அடைந்தே தீருவோம் திராவிடநாடு! என்று சொல்லி கொடியை உங்கள் சார்பாகவும், என் சார்பாகவும் உயர்த்தி வைக்கிறேன்.

(22-2-46ல் ஒரு நண்பரிடமிருந்து வந்த கடிதம்)

அன்பார்ந்த ஐயா வணக்கம். தாங்கள் 26-1-46ல் அனுப்பிய காயசுத்தி லேகியம் வரப்பெற்றோம். ஆனால் பார்சல் எடுத்து உடைத்த உடனேயே என் நண்பர்கள் எல்லாம் சிறிதுசிறிது அளவு உடனே சாப்பிடத் துடங்கிவிட்டார்கள். நான்மட்டும் சாப்பிட்டு அனுபவம் தெரிய ஏதுவில்லாமல் போய்விட்டது. அதனால் தாங்கள் தயவுசெய்து 1சேர் காயசுத்தி லேகியம் அனுப்புங்கள். நானே சாப்பிட்டு அனுபவத்தில் குணத்தைக் கண்டு எழுதுகிறேன். மேலும் சாப்பிட ஆசையுள்ள நம் நண்பர்கள் சிலர் இருக்கிறார்கள். தவறாது உடனே அனுப்புங்கள்.

தங்கள் அன்புள்ள,

(Sd) M. Sangaralingam, Merchant,
Pedariar North Street, Kottar P. O.
(S. Travancore)

காயசுத்தி லேகியம், கறுங்கல் குடலையும் இளக்கி, மலத்தை சுகமாய்ப் பிரித்து, உடலுக்கு புத்துணர்ச்சியளிக்கும் அருமருந்து.

ஜெயராம் காயசுத்தி லேகியம்

1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2-2-0. தபால்கூலி வேறு.

ஜெயராம் வைத்தியசாலை, 28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, தும்பகோணம்.

சோல் ஏஜண்டு: M. E. அப்துல் ரகிமான் சாகிபு,
பெரியகடைவீதி, திருவண்ணாமலை.


Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press
42, Cutchery street ERODE.